**நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், ஈரோடு**

முன்னிலை : திரு. S.R. பாபு, B.A., B.L.

நீதித்துறை நடுவர் எண்.3, ஈரோடு.

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 10-ம் நாள் செவ்வாய்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.1279/2025**

**CNR Number: TNED-04-009666-2025**

அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்,
ஈரோடு தெற்கு காவல் நிலையக்
குற்ற எண்.305/2025 .....குற்றம் முறையிடுபவர்.

//எதிர்//

பிரகலநாதன்,
த/பெ.கிருஷ்ணமூர்த்தி. .....எதிரி

இவ்வழக்கானது 24.10.2025-ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் கோப்புக்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை-2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.கமலகண்ணன் அவர்கள் முன்னிலையாகியும் இருந்திட்ட இவ்வழக்கில் அனைத்து ஆவணங்களையும், சாட்சியங்களையும், பரிசீலனை செய்த பின்னரும் இன்று இந்நிதிமன்றம் ஆய்ந்தளிக்கும்

**தீ ர் ப் பு ரை**

**ஈரோடு தெற்கு காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் எதிரியின் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கையின் விவரம்:**

கடந்த 09.08.2025ம் தேதி காலை 09.20மணிக்கு ஈரோடு தெற்கு காவல்நிலைய சரகம் ஈரோடு டு பெருந்துறை ரோடு டாக்டர்.ராதாகிருஷ்ணன் சாலை ஸ்டார் பிரியாணி கடை அருகில் அருணாச்சலம் என்பவர் பெருந்துறை ரோட்டில் உள்ள மதுரம் கூல்டிரிங்ஸ் கடையிலிருந்து டீச்சர்ஸ் காலனி செல்வதற்கு பெருந்துறை ரோட்டை கடக்க வேண்டி வடக்கிலிருந்து தெற்காக நடந்து கடந்தபோது அதே ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்காக பிரகலாதன் TN 56 J 9403 என்ற பதிவெண் கொண்ட பல்சர் பைக்கை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மோதி வாகன விபத்தை

S R BABU
Digitally signed by S R BABU
Date: 2026.03.10 15:52:38 +0530

ஏற்படுத்திய குற்றத்திற்காகவும், மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக விபத்தினால் அருணாச்சலம் என்பவருக்கு வலது தோள்பட்டை, வலது பக்க இடுப்பு மற்றும் வலது முழங்கால் ஆகிய இடங்களில் எலும்பு முறிவு கொடுங்காயத்தை ஏற்படுத்திய குற்றத்திற்காகவும் ஈரோடு தெற்கு காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் எதிரியின் மீது BNS சட்டப்பிரிவுகள் 281, 125(b)–ன் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி மீது BNS சட்டப்பிரிவுகள் 281, 125(b) படி வழக்கு கோப்புக்கு எடுக்க போதிய முகாந்திரம் இருக்கிறது என்று கருதியமையால் எதிரி மீது BNS சட்டப்பிரிவுகள் 281, 125(b) படி வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு, எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானபோது எதிரிக்கு அரசு தரப்பினரால் ஆதாரமாகக் கொள்ளப்பட்ட அனைத்து ஆவணங்களும், BNSS பிரிவு 230–வது பிரிவின் படி நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டது. எதிரிகள் மீதான குற்றம் குறித்து BNSS பிரிவு 263–ன் படி எதிரி மீது குற்றச்சாட்டுகள் வனைய போதிய ஆதாரங்கள் உள்ளதாக தெரிந்தமையால் எதிரி மீது BNS சட்டப்பிரிவுகள் 281, 125(b) கீழான குற்றச்சாட்டுகள் வனைந்து வாசித்து விளக்கி கூறி வினவியபோது, எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார். எனவே அரசு தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

3. இவ்வழக்கு குற்றத்தை எதிரி தம்மிச்சையாக ஒப்புக்கொண்டு குற்ற ஒப்புதல் மனு தாக்கல் செய்துள்ளார். ஆகவே, ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் குறித்து நிரூபிக்கப்பட தேவையில்லை என்பதன் அடிப்படையில், எதிரி BNS பிரிவு 281, 125(b)–ன் படி குற்றவாளி என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

4. முடிவாக எதிரி BNS பிரிவுகள் 281, 125(b)–ன் படி குற்றவாளி என முடிவு செய்து எதிரிக்கு BNS பிரிவு 281–ன் கீழான குற்றத்திற்கு ரூ.1000/– அபராதம் விதித்தும், கட்டத் தவறும் பட்சத்தில் 2 வாரகாலம் மெய்க்காவல் சிறைதண்டனை

S R BABU
Digitally signed by S R BABU
Date: 2026.03.10 15:52:45 +0530

விதித்தும், BNS பிரிவு 125(b)–ன் கீழான குற்றத்திற்கு ரூ.10,000/– அபராதம் விதித்தும், கட்டத் தவறும் பட்சத்தில் 2 வாரகாலம் மெய்க்காவல் சிறைதண்டனை விதித்தும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது (மொத்த அபராதம் ரூ.11,000/–). எதிரி பிணையில் இருந்து வந்துள்ள நிலையில் மேல்முறையீட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல்முறையீடு செய்யவில்லையெனில் எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தாளருக்கு நேரடியாகப் சொல்லப்பட்டு அவரால் வரிவடிவாக்கப்பட்டு கணினியில் கணினிமயமாக்கப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 10–ம் நாள் என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு அவையறியப் பகரப்பட்டது.

S R BABU
Digitally signed by S R BABU
Date: 2026.03.10 15:52:49 +0530

நீதித்துறை நடுவர் எண்.3,
ஈரோடு.

**இணைப்பு.** இல்லை

**குறிப்பு.**

1. எந்த சாட்சியும் விசாரிக்கப்படவில்லை.
2. தீர்ப்பு குறித்து காவல்துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டது.
3. மொத்த அபராதத் தொகை ரூ.11,000/– வசூலிக்கப்பட்டது.

S R BABU
Digitally signed by S R BABU
Date: 2026.03.10 15:52:54 +0530

நீதித்துறை நடுவர் எண்.3,
ஈரோடு.